வளன்ஆயம்
நொழிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# கவிஞர் வெண்ணிலா கவிதைகளில் பெண்மொழி

**இ.யோகராஜ்,** உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

மின்னஞ்சல் முகவரி – iyogaraj11@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

உள்ளத்தில் தோன்றுகின்ற உணர்ச்சி வெளிப்பாடே கவிதையாக மலர்கின்றது. மனித வாழ்க்கை போராட்டங்களும் சிக்கல்களும் நிறைந்தது. அவற்றை எதிர்கொண்டு வாழ்வில் அனைவரும் வெற்றி பெற நம்பிக்கையும் விடாமுயற்சியும் துன்பத்தில் துவண்டுவிடாத மனப்போக்கும் எதையும் சமாளிக்கும் துணிவும் பரந்த அறிவும் தேவைப்படுகின்றன. இவற்றை இன்றைய இளைய சமுதாயம் அறிதல் சாலச்சிறந்தது. அவ்வகையில் தற்காலப் பெண் கவிஞர்கள் சமூகச் சிக்கல்களையும் அவற்றில் இருந்து மீளும் நுட்பங்களையும் ஆராயும் வண்ணமாக இக்கட்டுரை அமையப் பெறுகின்றது.

**கலைச்சொற்கள்**

பெண்மொழி, சமையல் அறை, மானுடம், ஈசன், இரப்பை, ரணம், ஆணாதிக்கம், முதிர்கன்னி, வளரிளம்பெண், இல்லறம், போர்க்களம், குமரி, ஆடுகளம், பொறுமை, இரக்கம், தியாகம், ஈகை.

**முன்னுரை**

இலக்கியம் என்பது சமூகத்தின் வெளிப்பாடு. இலக்கியத்தின் பாடுபொருள் சமுதாயத்தில் இருந்தே வெளிப்படுகிறது. இப்பாடுபொருள் சமுதாயத்தின் ஒரு அங்கமாக விளங்கும் கவிஞன் தான் கண்ட நிகழ்வுகளையும் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் பாடுபொருளாகக் கொண்டு தம் படைப்பில் வெளிப்படுத்துகின்றனர். சமுதாயத்தில் நிகழ்ந்தேறும் நல்லனவற்றைப் போற்றுதலும் தீயனவற்றை இடித்துறைத்தலும் கவிஞனின் பணி. சமூகம் முன்னேற்றம்

அடைவதற்கான வழிகளையும், சிக்கல்களைப் போக்குவதற்கான விடயங்களையும் தன் படைப்பின் மூலம் சமுதாயத்திற்கு உணர்த்துவது கவிஞனின் கடமையாகும். சங்க காலம் தொட்டு தற்காலம் வரை படைப்பாளர்கள் சமுதாய மாற்றத்திற்கு தன்னாலான பங்களிப்பினை ஆற்றிவருகின்றனர். அவ்வகையில் 21ஆம் நூற்றாண்டின் புதுக்கவிதைத்துறையில் பெயர்ச்சொல்லத்தக்க பெண் கவிஞருள் ஒருவர் அ.வெண்ணிலா. கவிஞர் வெண்ணிலா கவிதைகளில் பெண்மொழி என்னும் கோணத்தில் இக்கட்டுரை அமையப் பெறுகின்றது.

**பெண்மொழி**

பெண்மொழி அல்லது பெண் எழுத்து என்பது பெண் எழுதுவது, பெண் தன்னை உணர்ந்துகொண்டு தனக்கான சிக்கலை தன் சூழலில் எடுத்துரைப்பது. இங்கே தன்னை உணர்தல் என்பது தன்னைப் போன்ற பெண்களின் உணர்வுகளின் இயல்பை உணர்வது ஆகும். இவ்வாறு எழுதும் எழுத்தில் தீவிரமும், எழுத்துக் கூச்சமின்மையும் இடம்பெறும். தனது உண்மையான அனுபவங்களை கனத்த வார்த்தைகளால் வெளிப்படையாகப் பேசுவது. பூசி மெழுகும் நிலையின்றியும் மழுப்பும் நிலையின்றியும் நடப்பியல் நிலையை உள்ளவாறு எடுத்துரைப்பதே பெண்மொழி.

**சமையல் அறை**

சமுதாயம் வளர்ச்சி அடைந்ததே தவிர பெண் சார்ந்து வளர்ச்சி அடையவில்லை. அவர்களுக்கான உரிமை மறுக்கப்படுகின்றது என்பதை

> **“பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி**
>
> **பேணி வளர்த்திடும் ஈசன்**
>
> **மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல**
>
> **மாதர் அறிவைக் கெடுத்தார்”**[1]

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கென்று அறிவு வளர்ச்சிக்கு வித்தான அடிப்படையான கல்வியே மறுக்கப்படுவதை பாரதியார் பெண்மையை மூடராக்கியவரை மூடர் என்று ஓங்காரமிட்டு கூறுகின்றார்.

மானுட வரலாற்றின் பின்னால் ஒரு பெண் இருப்பது உண்மை. வரலாற்றோடும், வாழ்வோடும், இயற்கையோடும் தொன்று தொட்டு இன்றுவரை மண்ணில் வளர்ந்து சாதனை செய்தவர்கள் பலர். பெண்கள் வெற்றுச் சடப்பொருள்

அல்ல மாறாக ஆண்களைப் போலவே அறிவியலிலும், ஆற்றலிலும், படைப்பிலும் உயர்ந்து வருகிறார்கள். பெண்களின் செயல்பாடுகள் அனைத்தும் உயர்வாக இருப்பினும் பெண் என்ற நிலைகளில் தாழ்வாகத்தான் இருக்கின்றாள் என்பதை,

**“உன் அழுக்கச் சட்டைகளின்**

**குவியல்களுக்குள்**

**உட்கார்ந்துக் கொண்டிருக்கிறேன்**

**எவ்வளவு நேரம் விளக்கித் துடைத்தாயிற்று**

**பாத்திரங்களை**

**நம் இரைப்பைகளை நிரப்பப்**

**பொங்கியும் வைத்தாயிற்று”[2]**

என்ற அடிகள் பெண்களின் சமையல் அறை வாழ்க்கையை எடுத்துரைக்கிறது. இதனை நோக்கும் போது

**“பெண்கள்**

**சமையலறைக்கும்**

**கட்டிலறைக்கும்**

**ரன்கள் எடுத்தே**

**ரணமாகிப் போனாள்” [3]**

என்ற வைரமுத்து வரிகள் நினைவிற்கு வருகின்றன.

**ஆணாதிக்கம்**

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்கிறார் ஐயன் வள்ளுவர். ஆணும் பெண்ணும் சமம் என்பதே நிதர்சன உண்மை. ஆணுக்குப் பெண் சமம் என்பது ஆணாதிக்கப் போக்காக காணப்பட்டாலும் இதுவும் இன்றளவு மட்டும் ஏட்டளவில் மட்டுமே உள்ளது என்பதை,

**“விதவிதமாய் சமைத்தோம்**

**பணிவாய் பரிமாறினோம்**

**எல்லாம் செய்து விட்டு ஏனோ**

**பசித்திருக்கிறோம்**

**அங்கேயும் ஆண்பந்தி முந்தி என்று**

**அடுக்களையுள் காத்திருக்கச் சொல்கிறீர்கள் ”[4]**

என்ற அடிகள் இல்லத்தில் செக்கு மாடாய் சுழன்று உழைத்தாலும் அவளுக்கான உணவுக்கூட இயல்பாகக் கிடைக்கப் பெறுதல் இல்லை என்ற அவலநிலை இருப்பதை கவிஞர் வெளிப்படுத்துகின்றார்.

**முதிர்கன்னி**

அடக்கம், பொறுமை, தியாகம், இரக்கம், அழகு, ஈகை முதலிய குணங்கள் சேர்ந்து பெண்மையாகின்றன. பெண்களை மகாலெட்சுமி , குடும்ப குத்துவிளக்கு என்று புகழாரம் பாடினாலும் பெண்களுடைய வாழ்க்கை முறையானது இருள் சூழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றன. பெண் வாழப்போகின்ற புகுந்த வீட்டில் பொருளாதாரச் சூழலை சமன் செய்யும் பொருட்டு மனம் உவந்து பெண் வீட்டார் கொடுக்கும் சிறு அன்பளிப்பு காலப்போக்கில் வரதட்சணை என்ற பெயரில் கட்டாயச் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளது. வரதட்சணையின் காரணமாகப் பெண்களை விற்பனைப் பொருளாக மாற்றியிருப்பது கவலைக்குரியதாகும். திருமண நிகழ்வையும் பெண்களையும் வணிகமயமாக இச்சமூகம் பார்க்கின்றது. திருமணம் நடைபெற வேண்டிய பருவத்தில் வரதட்சணை காரணமாகப் பெண்கள் முதிர்கன்னியாக வாழ்கின்றனர் என்பதை,

**“எட்டாம் வகுப்பு படிக்கையிலே**

**சுமதிக்கு கல்யாணம் நடந்துச்சு**

**வேலைக்குப் போயும்**

**இன்னும் ஏன் இப்படியே**

**பார்வையிலேயே கழுத்தைத்**

**துழாவுகிறார்கள் தோழிகள் ”[5]**

என்னும் கவிதை பெண்களின் சோகத்தை வெளிப்படுத்துகின்றது. அப்பெண் தான் எதிர்பார்த்த வாழ்க்கையின்றி எந்த நிலையில்

அமையப் பெற்றாலும் ஏற்றுக்கொள்ளும் மனநிலைக்குத் தள்ளப்படுகின்றாள்.

**வளரிளம் பெண் சிக்கல்கள்**

வளரிளம் பெண்கள் தன்னுடல் மாற்றங்கள் கண்டு மனதளவில் அச்சம் கொள்கின்றனர். பிறப்பால் ஓர் உயிர் என்றாலும் கூட ஆண், பெண் என்ற பாலியல் பேதமைக்குள் பிரித்துணரப்படுகின்ற நிலைகள் பெண்ணுடைய பருவம் சார்ந்த வளர்சிதை மாற்றங்கள் காரணமாகப் பொது இடங்களில் அவர்கள் படும் துன்பத்தினை கவிஞர்

**"குதிக்கும் குமரிகளும்**

**படியிறங்கும் பத்தினிகளும்**

**ஆடுகளம் அதிர வீராங்கனைகளும்**

**புழுங்க வேண்டியிருக்கிறது**

**குதிக்கும் மார்புகள் வெறிக்கும் கண்களுக்காக"**[6]

என்ற கவிதையின் மூலம் புறத்தோற்றத்தில் மாற்றம் கொண்டுள்ள பெண்கள் பொதுவெளிகளில் பார்க்கப்படும் பார்வைகள் ஒவ்வொன்றும் அவர்களுடைய இயல்பு நிலை வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவதை தம் படைப்பின் மூலம் சாடியுள்ளார்.

**"ஒவ்வொரு இரவுகள் முடிந்து**

**வீடு திரும்பும் வேலையிலும்**

**நான் இழந்தது**

**ஒன்றுமில்லையென**

**நிரூபிக்க வேண்டியிருப்பதும்**

**.......**

**நம் வாழக்கங்களாய் இருப்பதையே**

**வாழ்தல் என்கிறார்கள் "**[7]

என்ற கவிதை மூலம் வேலைக்கு சென்று திரும்பும் பெண்கள் ஒவ்வொரு நாளும் அவர்கள் கற்பினை மெய்ப்பிக்க வேண்டிய நிலையின் சமூக எதார்த்த நிலையினை தம் வைரவரிகள் மூலம் எடுத்து இயம்புகின்றார்.

**இல்லறம் போர்க்களம்**

தன்னலம் பாராமல் குடும்பத்திற்காக உழைக்கும் பெண்கள் தனக்கான ஓய்வு என்பது கூட இல்லாமல் கனவாகத்தான் இருக்கின்றது என்பதை,

**"கட்டில் கண்துஞ்ச**

**என்பது கனவாய்தான் உள்ளது"**[8]

என்றும்,

**"சுத்தம் முடித்து**

**துணி துவைத்து**

**சாப்பாடு முடித்து**

**கொஞ்ச நேரம் சாய**

**வந்தால்"**[9]

என்ற கவிதை வரிகள் தூக்கத்தைத் துளைத்து குடும்பத்திற்காக பெண்கள் உழைக்க வேண்டியிருக்கிறது என்பதை எடுத்து இயம்புகின்றார்.

**"ஏய் என கால் சீண்டி**

**போகிற போக்கில்**

**எழுப்பி போகிறாய் "**[10]

இரவுபகல் பாராமல் தன்னை முழுவதும் குடும்பத்திற்காக தியாகம் செய்து கொண்டு உழைக்கும் பெண்களை நன்முறையில் மதிக்கப்படாமல் இருப்பதையும் இல்லறத்தில் பெண்கள் படும் இன்னல்களையும் தன் எழுத்தாற்றலால் பதிவிடுகின்றார்.

**முடிவுரை**

- ஆண், பெண் பேதங்களை மறுதலிப்பதாய் கவிஞர் வெண்ணிலாவின் கவிதைகள் அமைகிறது.
- பெண்கள் இன்றளவும் இல்லறத்தில் இயந்திரமாகவே பார்க்கப்படுவதை எடுத்து இயம்புகின்றார்.
- பெண் என்பவள் தனக்காக வாழ்பவள் அல்ல தன்னை முற்றிலும் தியாகம் செய்து கொண்டு தன் குடும்பத்திற்காகவே அனுதினமும் வாழ்கிறாள் என்பதை ஆணாதிக்க சமூகத்திற்கு அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது.
- பெண் என்னும் புறஉடல் குறியீடு அவளின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதைச் சுட்டுகின்றார்.

**சான்றெண் விளக்கம்**

1. பாரதியார் கவிதைகள், 1967.
2. வெண்ணிலா, நீரில் அலையும் முகம், ப.16.
3. வைரமுத்து கவிதைகள்
4. வெண்ணிலா, நீரில் அலையும் முகம், ப.24.
5. மேலது, ப.10
6. வெண்ணிலா, ஆதியில் சொற்கள் இருந்தன, ப.35.
7. மேலது, ப.35.
8. வெண்ணிலா, நீரில் அலையும் முகம், ப.46.
9. மேலது, ப.42.
10. மேலது, ப.46.

**துணைநூற்பட்டியல்**

1. பாரதியார், பாரதியார் கவிதைகள், சுவாமி மலை பதிப்பகம், தி.நகர், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 2016

2. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், சூர்யா லிட்டரேச்சர், சென்னை,2007.

3. வெண்ணிலா அ., நீரில் அலையும் முகம், அகழி வெளியீடு,வந்தவாசி, 2001.

4. வெண்ணிலா அ., ஆதியில் சொற்கள் இருந்தன, அன்புநிலா பதிப்பகம், வந்தவாசி,2006.

.